1998 மே 5]

பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பதிலையே மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிப்பதாகச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் கேட்ட துணை வினாவே பொருத்தமில்லாத ஒன்று. மூல வினா, தேர் செப்பனிடுவதைப்பற்றியது ஆனால், நீங்கள் இழுவை இரயில் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்; உட்காருங்கள்.

வினா எண் *431*, திரு. ஜி. கே. மணி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**431—**

பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்தல்

***10281—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி பஞ்சாயத்து நாகனம்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தாசம்பட்டி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து, நாகனம்பட்டி கிராம குடும்ப அட்டைகளை இணைத்து எலுமல்மந்தையில் ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்க *6-5-1997*-ல் உத்தரவிடப்பட்டது. இது தொடர்பாக எழுந்த சிக்கல்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டு, நாகனம்பட்டி மக்கள் எலுமல்மந்தை கிராமத்திற்குச் சென்று, பொருட்களை வாங்கச் சம்மதம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், நாகனம்பட்டியில் மேலும் ஒரு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[1998 மே 5

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். தாசம்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து நாகனம்பட்டி கிராம குடும்ப அட்டைகளைப் பிரிக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அங்கே நியாயவிலைக் கடை திறக்கப்பட வேண்டும் என்று கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், அங்கே இருக்கிற சி.எஸ்.ஆர். அவர்கள், எலுமல்மந்தையில் இருக்கக்கூடியவர்களிடம் 25 ரூபாய் பெற்றுக்கொண்டு, அங்கே கடையைத் திறக்க முன்வந்தார். அப்போது, மாவட்ட ஆட்சித் தலைவர், நாங்கள் எல்லாம் சேர்ந்து, 'இரண்டு ஊர்களுக்கும் இடையே பதட்டம் ஏற்படுகிறது; இப்படிப்பட்ட நிலையில் அங்கே கடையைத் திறக்கக்கூடாது என்றும், இரண்டு ஊர்களுக்கும் மத்தியிலே ஒரு நியாய விலைக் கடையைத் திறக்கலாம்' என்றும் முடிவு செய்யப்பட்டது. இருந்தாலும்கூட, அதை மாற்றி, அங்கே இருக்கின்ற அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. ஜி. கே. மணி:** அந்த ஊரிலே கடையைத் திறந்த காரணத்தாலே பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, திறக்கப்பட்ட அந்தக் கடையை ரத்து செய்யலாம்; அல்லது இரண்டு ஊர்களுக்கும் மத்தியில் ஒரு கடையைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பல இடங்களில் நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், என் முன்னாலேயே, தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள்; கடிதம் கொடுத்திருக்கிறார்கள். கடிதம் கொடுத்தும்கூட எதுவும் நடைபெறவில்லை. என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 'ஜி.கே. மணி, தொகுதி எம்.எல்.ஏ. சொன்னால் எந்தக் கடையும் திறக்கக்கூடாது என்று சொல்லி எங்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது, நாங்கள் எதுவும் செய்ய முடியாது' என்று அதிகாரிகள் சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு...

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், உங்கள் முன்னாலே அமைச்சர் அவர்கள் தொலைபேசி மூலமாகச் சொன்னார்கள் என்று சொல்கிறீர்கள்;

1998 மே 5]

நீங்கள் சொன்னால் கடைகளைத் திறக்கக்கூடாது என்று சொன்னார் என்றும் சொல்கிறீர்கள், இரண்டிற்கும் பொருத்தம் இல்லை.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதுமான அளவுக்கு நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, எந்தச் சட்டமன்ற உறுப்பினர் சொன்னாலும் திறக்கக்கூடாது என்று யாரும் உத்தரவிட முடியாது. கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு நாங்கள் சொல்லியிருப்பதே, சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னால் அதைக் கேட்க வேண்டும் என்பதுதான். உறுப்பினர் அவர்கள் சொன்னதை விசாரித்து, அப்படி இருக்குமானால், அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்ல, எந்த இடத்தில் அரசு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடைகளைத் திறக்க வேண்டுமென்றாலும், அதைத் திறப்பதுதான் எங்களுடைய வேலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை மறு ஆய்வு செய்து நாகனம்பட்டி கிராமத்தில் ஒரு கடை திறக்க முடியுமா அல்லது இந்தக் கடையை மாற்றி இடையிலே வைக்க முடியுமா என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து பேசி, நல்லதொரு முடிவை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 432, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**432—**

**தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை**

***11194—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புனக்குளம் என்னுமிடத்தில், தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை இயங்காததை அரசு அறியுமா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்